விலை15/-

# வானோசை

மாநகர சபை
யாழ்ப்பாணம்



ஜூலை - ஓகஸ்ட் 1994

# சிறீ விநாயகர் வைத்திய நிலையம்

வாதரோகம், சருமரோகம் மற்றும் சமூக வைத்தியம் போன்ற சிகிச்சைமுறைகள் இங்கே செய்யப்படுகின்றன.

மிகவும் அனுபவமிக்க வைத்திய ஆலோசனைகளுடன் கூடிய சிகிச்சை முறைகளுக்கு நீங்கள் செல்லவேண்டிய இடம்

சிறீ விநாயகர் வைத்திய நிலையம்

தமிழ், ஆங்கில வைத்தியமுறைகளில் தலைசிறந்து விளங்கும் வைத்திய நிபுணர்களைக்கொண்டு உங்கள் உடல் ஆரோக்கிய வாழ்விற்கு உத்தரவாதம் அளிப்பது

சிறீ விநாயகர்
வைத்திய நிலையம்

காங்கேசன்துறை வீதி,
கோண்டர்வில் மேற்கு,
கோண்டாவில்.

வண் ... ணை கிளை நூலகம்
நகர சபை
யாழ்ப்பாணம்

... நூலகம்
30-8-1994
யாழ்ப்பாணம்

# வானோசை

வான் - 01 ஓசை - 02

**வா**னோசை உலகின் பல்வேறு வானொலிகளில் இருந்து ஒலிக்கின்ற ஆக்கங்களைத் தாங்கி வெளிவருவதை வாசகர்களாகிய நீங்கள் அறிந்துள்ளீர்கள் என்பதை உங்களிடமிருந்து வந்துள்ள கடிதங்களிலிருந்து தெரிகிறது.

இரண்டாவது இதழாக உங்கள் கைகளில் தவழும் இந்த ஓசையும் அமெரிக்கா, பிரிட்டன், இந்தியா, மலேசியா, சிங்கப்பூர், சிறீலங்கா ஆகிய நாடுகளில் இருந்து ஒலிபரப்பப்பட்ட வானொலி நிகழ்ச்சிகளிலிருந்து தொகுக்கப்பட்டதாகும்.

அரசியல், அறிவியல் மற்றும் பல பயனுள்ள அம்சங்களைத் தாங்கிவரும் வானோசையை எல்லோரும் படித்துப் பயன்பெற வேண்டும் என்பதே எமது விருப்பமாகும். வானோசை மென்மேலும் காலத்திற்கேற்ப சிறந்து விளங்க வாசகர்களாகிய உங்களின் ஆக்கபூர்வமான கருத்துக்களை தொடர்ந்தும் எதிர்பார்க்கின்றோம்.

## இந்த ஓசையில்...

- சூரியவம்சத்தினர் ஐப்பானியர்
- பாகிஸ்தானின் அணுக்குண்டு
- நட்சத்திர போர்த் திட்டம்
- ஆசியாவில் வேகமாகப் பரவும் எயிட்ஸ்
- பறவை இனங்கள்
- அமெரிக்காவில் உலகக்கிண்ண கால்பந்துப் போட்டி
- வினாக்களும் விடைகளும்
- இந்தியப் பிரதமரின் அமெரிக்கப் பயணம்

# சூரியவம்சத்தினர் ஜப்பானியர்

உலகத்திலேயே ஆனந்த மயமான வாழ்க்கையில் திளைப்பவர்களென்று ஜப்பானிய மக்களுக்கு பெயர் உண்டு. இதை வேறுவிதமாக சொல்லவேண்டுமானால், உலகத்திலேயே மிகவும் கஷ்டப்பட்டு உழைக்கும் மக்கள் ஜப்பானிய மக்கள் என்று சொல்வது பொருந்தும்.

உலகப் போரின் போது அணுக்குண்டுத் தாக்குதலுக்கு இலக்காகி மக்கள் சமுதாயமே பரம்பரை பரம்பரையாக பாழ்பட்டு அழிந்துவரும் பெரும் கேட்டுக்கு இலக்கான நாடு. இனி ஜன்ம ஜன்மத்திற்கு தலையெடுக்க முடியாதென்று கருதப்படும் விதத்திலே அழிந்துபோன ஒரு தேசம். கனவா? கற்பனையா? என்று அதிசயப்படும் அளவிற்கு இன்று தலைநிமிர்ந்து நின்று ஆனந்த வாழ்க்கை வாழ்கிறது என்றால், இந்த அதிசயம் அங்கு எவ்விதம் நிகழ்ந்தது? உழைப்பு,உழைப்பு கடும் உழைப்பு என்ற தாரக மந்திரத்தை உயிர் மூச்சாக்கி, ஜப்பானிய மக்கள் கொண்டதன் விளைவு தான் இந்த ஆனந்த வாழ்க்கை.

## உடல் அயராத உழைப்பு

ஜப்பானிய மக்களின் பழக்க வழக்கங்கள் என்னவென்று யோசித்துப் பார்த்தோமானால், உடல் அயரா உழைப்பதும் உழைப்பின் பயனை அனுபவிப்பதும், தாம் அந்நிய ஆதிக்கத்தின்கீழ் நெடுங்காலம் அடக்கியொடுக்கி வைக்கப்பட்டதன் காரணத்தினால்தான், விடுதலை பெற்று ஏறத்தாழ கால் நூற்றாண்டுகள் ஆனபோதும் கூட நம்மால் சரியாகத் தலையெடுக்க முடியவில்லை என்று நாம் இன்று வேதாந்தம் பேசிக் கொள்கிறோம். ஆனால் கிட்டத்தட்ட தரைமட்டமான நிலையில் அழிந்தே போய்விட்ட ஒரு நாட்டில், மிகக் குறுகிய காலத்தில் மிகக் கடின உழைப்பால் செப்பனிட்டுப் பளபளக்க வைத்துவிட்டனர் இந்த ஜப்பானிய மக்கள். நம்முடைய பழக்கவழக்கங்களில் கடும் உழைப்புக்கு இவ்வகையாக மதிப்பில்லை. ஆனால் அங்கு உழைப்புத்தான் வழக்கமும், பழக்கமுமாக இருக்கின்றது.

ஜப்பானியர் தங்களைச் சூரிய வமசத்தினர் என்று கூறிக்கொள்கின்றார்கள். ஒருவேளை அவர்களது கடின உழைப்பிற்கு இது தான் காரணமாக இருக்குமோ? அதாவது சூரியன் ஒய்வு ஒழிச்சலின்றி உழைத்துக் கொண்டே இருக்கிறான். ஒருநாட்டில் மறைந்

தால் இன்னொரு நாட்டில் இவன் ஒளியிருக்கிறது. இவ்விதம் ஓய்வின்றி உழைக்கும் சூரியனின் பண்பைப் பெற்றதனைத்தான் தங்களை சூரிய வம்சத்தினர் என்று ஜப்பானிய மக்கள் கூறிக் கொள்கின்றார்களோ? எது எப்படியிருப்பனும் ஐப்பானிய மக்களின் உழைக்கும் பழக்கம் எமக்கெல்லாம் பெரியபடிப்பினை. சிலவிடயங்களில் பண்டைய பாரதமும் ஜப்பானும் ஒன்றாகவே இருந்துவந்திருக்கின்றது. சான்றாக பெண் அடிமையை எடுத்துக் கொள்வோம் பெண்களை அடிமைப்படுத்தி கொடுமைப்படுததியதில், பண்டைய ஐப்பானிய மக்கள் பாரத மக்களையும் விஞ்சியிருந்தனர். பெண்கள் ஆண்களின் இன்பப்போதைப் பொருள் என்ற அளவுக்குமேல் பெண்களுக்கு மதிப்புத்தரவில்லை. கொடுமை இவ்வளவோடு நின்றுவிட்டிருந்தால் பரவாயில்லை பெண்இனத்தின் நடமாட்டத்தையே கட்டுப்படுத்தும்விதத்தில், அவர்களுக்கு கால்களில் இரும்புப்பாதணிகளை மாட்டி வதைத்தனர். குழந்தைப் பராயத்திலேயே பெண் குழந்தைகளுக்கு கால்களை இறுகப் பிடிக்கும்விதத்தில் இரும்புப்பாதணிகளை மாட்டி விடுவார்கள். குழந்தை இரும்புப் பாதணியுடனேயே வளரும். பாதணி இருக்கும் காரணத்தினால் கால்கள் இயல்பான வளர்ச்சியை இழந்து குறுகிவிடும். வளர்ச்சியடைந்த

## இளமையில் இருக்கும் லெகிதின்

மூளைவளர்ச்சிக்கு மிகவும்முக்கியமானது(Lecithin)லெசிதின் மூளையில்30சதவிகிதம், நரம்புகளில் 17 சத விகிதம் காணப்படுகிறது. நாளம் நாடிச் சுரப்பிகளிலும், இருதயம், சிறுநீரகங்களிலும் காணப்படுகிறது.

ஈரலில் செலுத்தப்பட்டிருக்கும் கொழுப்பில் 73 சதவிகிதம் லெகிதின் இருக்கிறது. மூளைக்கு வேலை அதிகமாக இருக்கும்போதும் வேறுசுரப்பிகள் இயங்கும் போதும், அதிகமாகச் செலவாகின்றது. லெகிதூஸ் என்ற கிரேக்கச் சொல்லிலிருந்து லெகிதின் என்ற இந்தச் சொல் உருவானது.

தாவர எண்ணைகளிலும், பருப்பு வகைகளிலும் சோயா மீற், ஈரல் என்பவற்றிலும் லெகிதின் காணப்படுகிறது. இரத்தக் குழாய்களில் இருக்கும் கொலஸ்ரோலை சிறுசிறு துண்டுகளாக உடைக்கும் ஆற்றல் இதற்கு உண்டு. கால்களில் இருக்கும் அதிகளவு கொழுப்பு, கொலஸ்ரோல் ஆகியவற்றைக் குறைக்கும். எனவே லெகிதின் உடலில் இருக்கும்வரை கொலஸ்ரோலால் தீமையேற்படாது.

பின்னால் தாராளமாக நடக்க முடியாது தத்தித் தத்தித்தான் நடக்க முடியும். இவ்வாறு பெண் களின் பாதங்களைச் சீர்குலைத்து விட்டால் ஆண்களை வஞ்சித்து விட்டு அவர்கள் ஓடிவிடமாட் டார்கள் என அந்தநாள் மக்கள் நம்பினர். என்ன கொடுமை யான எண்ணம், இந்தியாவில் பண்டைய நாளில் பெண்ணை என்னென்னதான் கொடுமை செய்தாலும் இந்தளவிற்குப் போய்விடவில்லை அல்லவா? இந் நாளில் இந்தக் கொடிய பழக்கம் ஜப்பானிய மக்களிடையே அற்று விட்டதென்பது பெருமைக்குரிய விடயம்தான்.

இன்று ஜப்பான் பொருளா தாரத்துறையில் மாபெரும் வெற் றியை ஈட்டி, ஜப்பானின் அண் மைக்கால எழுச்சிதனைக்குப் புறம்புறட்டித் தன்னைவிட்டது போல அதன் பண்டைக்கால பழக்க வழக்கங்களும் பண்பாடு களும் தலைகீழாக மாற்றப்பட்டு விட்டன.

ஜப்பான் மக்கள் என்று சொல் லும்போது, நமக்குப் பெரும் திகைப்பையூட்டுவது ஜப்பானிய விவசாயப் புரட்சி, பல தேசத் துடன் ஒத்துப் பார்த்தால், மிகச் ,சின்னஞ் சிறிய பூமி ஜப்பான் ஜப்பானில் விளைநிலம் மிகக் குறைவு. முடிந்த இடங்களில் எல்லாம் பயிரிடுகின்றார்கள். மலைச் சரிவு களில் கற்களின் மீது மண்ணைக் கட்டி அதில் விவ சாயம் செய்கிறார்கள். மனம் இருந்தால் மார்க்கம் இல்லையா? என்று ஒரு பழமொழி கூடச் சொல்வார்கள் இல்லையா? அது இந்த விடயத்தில் ஜப்பானுக்குப் பொருந்தும். கடின உழைப்புக்கு அடுத்து, ஜப்பானின் பெருமைக் குச் சான்று கூறுகிறது. ஜப் பானிய மக்களின் அமைதியும். அடக்கமும் நிறைந்த இயல்பு. ஜப்பான் மக்கள் எந்த விட யத்தையும் ஆரவாரத்துடன் அணுகுவதில்லை. அடக்கமாக, அமைதியாக அணுகுகின்றார் கள். ஜப்பானிய சூழ்நிலையில் எப்போதும் நிஜப்தம் குடிகொண் டிருக்கிறது. நடுத்தெருவாகட் டும், பொதுத் தெருவாகட்டும், நாடகம், சினிமாக் கொட்டகை யாகட்டும் இடமும் சூழ்நிலையும் எத்தகையதாக இருந்தாலும் அமைதியைக் கடைப் பிடிப்பது பெரியதொரு பண்பாகக் கொண் டிருக்கின்றனர்..

### ரோஜாவின் மகிமை

துருக்கியினப் பெண்கள் தாங்கள் மணம்செய்ய விரும் பும் ஆடவர்களின் பெயர் களை ரோஜா இதழ்களில் எழுதி நீரில் மிதக்கவிடு கிறார்கள். எந்த இதழ் அதிக நேரம் நீரில் மிதக்கிறதோ. அந்த இதழில் எழுதப்பட் டிருக்கும் பெயர் கொண்ட ஆடவனையே தங்கள் வாழ்க் கைத் துணையாகக் சேர்த்து தேடுக்கிறார்கள்.

# பாகிஸ்தான் அணுக்குண்டு

இந்தியா, தான் அணுக்குண்டைக் கண்டுபிடித்துவிட்டேன் என்பதைப் பறைசாற்ற 1974–ஆம் ஆண்டு, மே 18-ஆம் நாள் அதாவது ஓரளவு இருபது ஆண்டுகளுக்கு முன்னர், தனது அணுக்குண்டை இந்தியாவின் இராஜஸ்தான் மாநிலத்தில் பார் பாலைவனத்தில் ''எல்'' வடிவ மணல் பள்ளத்தாக்கில் புதைத்து பிரதமர் இந்திரா காந்தியின் முன்னிலையில் வெடித்துக்காட்டியது. அந்த அணுக்குண்டு எழுப்பிய புகைமூட்டத்தில் உலகமே அதிர்ச்சியடைந்தது. ஆனால் பாகிஸ்தானின் அடிவயிறு மட்டும் கலங்கியது. அந்த கலக்கம் தந்த பதிலடியே தற்போதைய பாகிஸ்தானின் அணுக்குண்டு.

இனி பாகிஸ்தானின் அணுக்குண்டுக்கு வருவோம். இந்தியாவும், பாகிஸ்தானும் ஒருபோதும் சண்டைபோடாமல் இருந்ததில்லை. இந்தியாவுக்கும், பாகிஸ்தானுக்கும் 1948, 1965, 1971 என மூன்று தடவைகள் பெரும் போர் நடந்துள்ளன. முதல் இரண்டு போர்கள் வெற்றிதோல்வியின்றி முடிந்தாலும், 1971-இல் நடந்த போரில் பாகிஸ்தான் இந்தியாவிடம் மிகவும் மோசமான முறையில் தோற்றுப் போனது. அதாவது பாகிஸ்தானின் கிழக்குப் பிராந்தியத்தை துண்டாடி வங்காளதேசம்

### பாம்பு

பொதுவாக பாம்பின் வாயில் மேல்தாடையும் கீழ்த்தாடையும் தளர்வாக இணைக்கப்பட்டிருக்கும். அதனால் அது தனது வாயை அதன் தலையில் இருந்து மூன்று மடங்கு அகலமாக விரிக்க முடியும். இதனால் தான் பாம்பினால் பெரிய தவளை, எலி போன்றவற்றை சுலபமாக விழுங்க முடிகிறது.

மலைப் பாம்பினால் 50 கிலோ கிராம் எடையுள்ள உணவுகளை ஒரு நேர உணவாக விழுங்க முடியுமாம். அப்படி விலங்குகளை விழுங்கும்போதே, அதன் வாயில் ஒரு திரவம் சுரக்கிறது. அந்தத் திரவம்தான் அந்த விலங்குகளின் எலும்புகளை உடைக்க உதவுகிறது. எனவே மலைப் பாம்பால் மனிதனைக் கூடச் சாதாரணமாக விழுங்க முடியும்.

என்னும் தனி நாட்டையே, இந்தியா உருவாக்கிக்காட்டியது மட்டுமல்ல, ஆயிரக்கணக்கான பாகிஸ்தான் வீரர்களையும் இந்தியா சிறைப்பிடித்தது. இப்படி அவமானகரமான தோல்வியைச் சந்தித்த பாகிஸ்தானில் போர் முடியும் தறுவாயில் தான் ''அணுக் குண்டுப் பிரதமர்'' என வர்ணிக்கப்படும் திரு. சூல்பிஹார் அலி பூட்டோ பிரதமரானார். திரு. அலி பூட்டோ அவர்கள் தற்போதைய பிரதமர் திருமதி பெனாசீரின் தந்தை, பதவிக்கு வந்த உடனேயே இந்தியாவிற்குச் சரியான பாடம் கற்பிக்க வேண்டுமென எச்சரித்தார் பூட்டோ. எனவே 1972- ஆம் ஆண்டு ஜனவரி ஆரம்பத்தில் பாகிஸ்தானின் தலை சிறந்த விஞ்ஞானிகளில் 50 பேரை அழைத்து பஞ்சாப் பிராந்தியத்திலுள்ள ''முல்தான்'' என்னும் இடத்திற்கு அழைத்துச் சென்றார் பூட்டோ.

''நீங்கள் என்ன செய்வீர்களோ, ஏது செய்வீர்களோ எனக்குத்தெரியாது. மூன்றே வருடத்தில் அணுக்குண்டு தயாரித்தே ஆக வேண்டும்'' என ஆவேசமாகப் பேசினார் பூட்டோ. ''மூன்று வருடமா? இயலாத காரியம், ஐந்து வருடங்களில் நாம் தயாரித்து விடலாம், ஆனால் எக்கச்சக்கமான பணமாகுமே'' எனத் தயங்கினர் விஞ்ஞானிகள். ''பணம் தானே கவலையை விடுங்கள். நூறுஆண்டுகள் புல்லைத் தின்று வாழ்ந்தாலும் வாழ்வோம் அணுக் குண்டு தயாரிக்காமல் விடமாட்டோம்'' எனச் சபதம் பூண்டார் பூட்டோ. ஆனால் சபதம் பூண்டவர் பாகிஸ்தானிலேயே தூக்கிலிடப்பட்டு சாகடிக்கப்பட்டார்.

## இளையராஜாவிற்கு கௌரவப்பட்டம்

இந்தியாவின் தமிழக பிரபல இசையமைப்பாளர் இளையராஜாவிற்கு அமெரிக்காவில் அரிசோனா மாநிலத்தில் உள்ள பல்கலைக்கழகமொன்று கௌரவ டாக்டர் பட்டம் வழங்கி கௌரவிக்க இருக்கிறது. இந்த விழாவில் நடிகர் கமலஹாசன் பங்கேற்கிறார். ஜூலை மாதம் இந்தக் கௌரவவிருது இளையராஜாவிற்கு வழங்கப்படுகிறது.

அன்றைய தினமே அமெரிக்காவில் உள்ள டினேஷ் நகரத்தில் இவருக்கு மற்றொரு பாராட்டும் வழங்கப்படுகிறது. அந்த நகரின் மேஜர் ஜோன் எபிரஹாம் இளையராஜாவிற்கு ''கௌரவநகர் பிரஜை'' என்ற அந்தஸ்த்தைக் கொடுத்து தங்கச் சாவியையும் பரிசாக வழங்குகிறார்.

என்பது சரித்திரக்கதை. அது போகட்டும் இப்படி ஆவேசப் பட்ட பூட்டோ அணுக்குண்டு தயாரிக்கத் தேவைப்பட்ட பல் லாயிரக் கனக்கான, கோடி ரூபாய்களைத் திரட்டும் முயற்சி யில் வெகு வேகமாகவே ஈடுபட் டார்.

## இஸ்லாமிய அணுக்குண்டு

"அமெரிக்கா, பிரான்ஸ், பிரிட் டன் நாடுகளிடம் அணுக்குண்டு உள்ளது. அது கிறிஸ்தவ அணுக் குண்டு. சோவியத், சீனா நாடு களிடம் அணுக்குண்டு உள்ளது, அது கம்யூனிஸ அணுக்குண்டு. இஸ்ரேலிடம் அணுக்குண்டு உள் ளது, அது யூத அணுக்குண்டு, இந் தியாவும் அணுக்குண்டைத் தயா ரித்துள்ளது. அது இந்து அணுக் குண்டு. இல்லாத ஒரே அணுக் குண்டு இஸ்லாமிய அணுக் குண்டு. எனவே நான் அணுக் குண்டைத் தயாரித்து இஸ்லா மிய அணுக்குண்டு எனப் பெய ரிடுகிறேன், நீங்கள் பணம் தாருங் கள் ஒரு முஸ்லீம் நாட்டிடமா வது அணுக்குண்டு வலிமை இருக்கட்டுமே" என கச்சிதமா கப் பேசிய பூட்டோ, லிபிய அதிபர் கடாபியைச் சம்மதிக்க வைத்தார். மகிழ்ச்சியில் மிதந்த போது கடாபி, பூட்டோவிற்கு நிதியை அள்ளிவழங்கினார்.

## கனவின் முதற்கட்டம் நிறைவேறியது

இவ்வேளையில் பாகிஸ்தானுக்கு, மற்றொரு நல்வாய்ப்பும் கைகூடி யது. அதாவது சோவியத் கம்யூ னிஸ அரசு ஆப்கானிஸ்தானுக்கு இராணுவத்தை அனுப்ப, சோவி யத் படையை முறியடிக்க அமெரிக்காவிற்கு பாகிஸ்தானின் உதவி வெகுவாகவே தேவைப் பட்டது. எனவே அமெரிக்கா ஜப்பான், உலகவங்கி, அரபுநாடு கள், ஐரோப்பிய சமூகம் எனப் பல தரப்புக்கள் மூலம் பாகிஸ் தான் தனது அணு வளர்ச்சித் திட்டங்களுக்கு என 1980-1990 வரை சுமார் 10 ஆண்டுகள் பல கோடி ரூபா நிதி உதவியைப் பெற்றது. இதில் பெரும்பாலான நிதியை பாகிஸ்தான் தனது அணுகுண்டுத் திட்டத்திற்கு வாரி இறைக்க ஆரம்பித்தது. அணுக் குண்டு தாயாரிக்கும் இரகசியம் தண்ணீரில் தடையம் தேடும் முயற்சி. எனவே அவைகளை சுயமாக ஆராய்ச்சி மூலம் கண்டு பிடிப்பதை விட, காசு கொடுத்து வாங்கும் முயற்சி நல்லது என நினைத்த பாகிஸ்தான்விஞ்ஞானி கள் இதில் அதிதீவிரமாக இறங் கினர். பல்வேறு முயற்சிகளுக்குப் பின்னர் பிரான்ஸ்நாட்டில் உள்ள எவ்.ஜி. என். எனப்படும் அணு சக்தி நிறுவனம் பாக்கிஸ்தா னுக்குத் தேவையான தொழில்

நுட்பத்தை தர முன்வந்தது. பூட்டோவின் கனவின் முதற் கட்டம்நிறைவேறியது.

## தொழில்நுட்பத் திருட்டு

பாகிஸ்தானின் ஹரப்பாநகரில் பாகிஸ்தானின் முதல் அணுமின் ஆலை வெற்றிகரமாக இயங்கத் தொடங்கியது. செறிவூட்டிய யுரேனியம், புளுட்டோனியம் தான் அணுக்குண்டு செய்வதற்கு தேவையான முதல் மூலப்பொருள். எனவே அணுமின் ஆலையில் பயன்படுத்தப்படும் எரிபொருளை யுரேனியத்திலிருந்து புளுட்டோனியத்தைப் பிரிக்க வழிசெய்ய வேண்டும். முதலில் இதற்குப் பிரிட்டன் பின்வாங்கி விட்டது. திரும்பவும் பிரான்சின் எவ்.ஜி. என். நிறுவனம்தான் பண ஆசையில் இந்தத் தொழில்நுட்பத்தையும்பாகிஸ்தானுக்குத் தரமுன்வந்தது. அதேநேரத்தில் அணுமின் ஆலையில் பயன்படுத்தப்பட்ட யுரேனியத்திலிருந்து புளுட்டோனியத்தைப் பிரிப்பதற்குத்தேவையான தனி ஆலையை அமைக்க வேண்டும். அதற்கென தொழில் நுட்பம் மற்றும் உபகரணங்கள் வாங்கும் முயற்சியில் பாகிஸ்தான் இறங்கியது. இது சற்றுக் கடினமான காரியம். இவ்வேளையில்தான் உதவினார் அப்துல் ஹைய்தர் ஹான். இவர் பாகிஸ்தான் விஞ்ஞானி, ஹொலண்ட் நாட்டில் உள்ள யுரேன்ஹோா எனப்படும் அணுசுத்திகரிப்பு ஆலையில் பணிபுரிந்தவர் இந்த விஞ்ஞானி. இவர் தான் வேலை பார்த்த யுரேன்ஹோா ஆலையில் இருந்து பாகிஸ்தானுக்குத் தேவையானதொழில் நுட்பத்தை (தொழில் நுணுக்கத்தை) திருடி பாகிஸ்தானுக்கே திருட்டுத் தனமாகவே எடுத்து வந்து விட்டார்.

அன்று முதல் யுரேனியத்திலிருந்து புளுட்டோனியத்தை பிரித்தெடுக்கும் வழிமுறை தெரியும். ஆனால் உபகரணம்தான் இல்லை. எனவே இந்தத் தொழில் நுட்பத்தை இவர் திருடி வந்தார். தொடர்ந்து ஹைதரின் ஆலோசனைப்படியே, ஆலைக்குத் தேவையான உபகரணங்களை உதிரிகளாக வாங்கி ஒன்று சேர்க்க, திட்டமொன்று வகுக்கப்பட்டது. பலகோடிக்கணக்கான ரூபாயுடன் பாகிஸ்தானின் விஞ்ஞானிகள் பல்வேறு நாடுகளுக்குப் பறந்தனர். தேவையான உதிரிப்பாகங்கள் பாகிஸ்தானுக்குக் குவிய ஆரம்பித்தன. பாகிஸ்தானின் இந்தக் கொள் முதல் பல நாடுகளின் சந்தேகத்தையும், பீதியையும் பரப்பியது. இதனால் பாகிஸ்தானுக்கு அணுக்குண்டு தயாரிப்பிற்குத் துணை போவதாகக் குற்றச்சாட்டுக்கு இலக்கான பிரான்ஸ் நாட்டின் எவ். ஜி. என். நிறுவனம் தனது முயற்சியில் பின்வாங்கிவிட்டது.

பொது நூலகம் நூலகசேவை
மா நகர சபை
யாழ்ப்பாணம்



## சீனாவின் உதவிக்கரம்

வெண்ணை திரண்டு வரும் போது தாளி உடைந்த கதையாகியும் பாகிஸ்தான் தனது முயற்சியைக் கைவிடுவதாக இல்லை. அப்போதுதான் உடனடி உதவிக்கரம் நீட்டியது சீனா. தனக்குச் சமமான வலுவுள்ள நாடாக இந்தியா மாறக்கூடாது என்ற சீனாவின் அச்சமும், தன்னுடன் போர் நடத்திய இந்தியா பாகிஸ்தானுடன் சண்டையிட்டே தனது வலிமையைச் செலவழிக்கட்டும் என்னும் தந்திரமும், பாகிஸ்தான் தரும் பெருமளவு பணமுமே,சீனா அணுக்குண்டுத் தொழில் நுட்பத்தின முக்கிய அம்சங்களை பாகிஸ்தானுக்கு விற்பனை செய்யக் காரணமானது. இதனால் பாகிஸ்தானின் அணுக்குண்டு முறையாகவே தயாரானது.

இனி சோதித்துப் பார்க்கவேண்டும் அவ்வளவுதான். பாகிஸ்தான் தனது அணுக்குண்டை உலகறிய வெடிக்கச் செய்து, சோதனை நடாத்திப் பார்த்தால் பாகிஸ்தான் பல குற்றச்சாட்டுகளுக்கு இலக்காகும் என அஞ்சியது. இதனால் சீனா நடாத்தும் பல்வேறு அணுக்குண்டுச் சோதனைகளுடன் இந்தச் சோதனையையும் நடாத்திப் பார்க்க பாகிஸ்தான் சீனாவைக் கேட்டுக் கொள்ள, சீனாவே பாகிஸ்தானின் அணுக்குண்டை வெடிக்கச் செய்து சோதனை நடாத்திப் பார்ப்பதாக நம்பப்படுகிறது. ஆனால் பாகிஸ்தான் தனது அணுச்சோதனைச் சாலையில் முதல் அணுக்குண்டுவெடிப்புச் சோதனையை நடாத்தி வெற்றி கண்டது என பாகிஸ்தானின் முன்னாள் இராணுவத் தலைமைத் தளபதி ஜெனரல் திரு. அஸ்வாம்பெக் அவர்கள் கூறிக் கொள்கிறார்.

## அமெரிக்காவின் போர் விமானங்கள்

எப்படியோ போகட்டும் பாகிஸ்தானின் அணுக்குண்டு தயார் நிலையை அடைந்து விட்டது, அது உண்மை. அணுக்குண்டு மட்டும் கண்டுபிடித்துவிட்டால் பயனில்லை. அதை எதிரி நாட்டில் வீச வலிமை கொண்ட ஏவுகணை மற்றும், நவீன போர் விமானங்களும் தேவை. பாகிஸ்தானுக்கு இந்த அணுக்குண்டை எடுத்துச் சென்று வீசும் வலிமை கொண்ட மிக நவீன போர் விமானங்கள் எவ்-16ரகவிமானங்களை அமெரிக்கா ஏற்கனவே பாகிஸ்தானுக்கு விற்பனை செய்துள்ளது. இன்னும் இதுபோல் 70 விமானங்களை அமெரிக்கா விற்பனை செய்யவும் முன்வந்துள்ளது.

சீனா பாகிஸ்தானுக்கு ஏவுகணைகளை விற்பனை செய்துள்ளது. இனியும் விற்பனை செய்யக் கூடும். எனவே பாகிஸ்தானிடம் விமானமும் தயார், ஏவுகணைகளும் தயார் இனி வீசுவது மட்டும்தான் பாக்கி. மொத்தத்தில் பாகிஸ்தானிடம் குறைந்தது 15 அணுக்குண்டுகள் தயார் நிலையில் உள்ளன. யார் தலையில் விழுந்து வெடிக்கப்போகிறதோ எனும் அச்சம் தான் இனி எஞ்சியிருப்பதெல்லாம்.

# நட்சத்திர போர்த்திட்டம்

நட்சத்திரப் போர் (Star War) அல்லது அயனவெளிப் போர்த்திட்டம் குறித்து ஓரிரு வரிகளில் சொல்ல வேணடுமானால் இப்படிச் சொல்லலாம். லேசர் போன்ற ஒளிக்கற்றையைப் பயன்படுத்தி எதிரிகளின் ஏவுகணை ஆயுதங்களை வீழ்த்தும் திட்டம் இது. இது குறிதது சற்று விரிவான விளக்கத்தைக் காணபோம்.

1983 ஆம் ஆண்டில் அப்போதைய அமெரிக்க ஜனாதிபதி றொனால்ட் றீகன் இந்தத் திட்டத்தை முன் வைத்தார். இந்தத் திட்டத்தின் உண்மையான பெயர் பாதுகாப்பு தந்திரோபாய ஆயத்தங்கள் (Strategic Defence Initiative) எனபதாகும். ஆனால் மக்களும், பத்திரிகைகளும், ஸ்ரார் வோர், என்ற பெயரில் வெளியான திரைப்படத்தில் கதிர் துப்பாக்கிகள் அதாவது, லேசர்கள், லேசர் கதிர்க்கற்றைகள் ஆகியன காட்டப்பட்டிருந்ததால் இந்தத் திட்டத்தின் வாயிலாக உருவாகும் ஆயுதங்களும் அதே போல் இருக்கும் என்பதால் ‘நட்சத்திரப்போர்’ என்ற பெயர் நிலைத்து விட்டது.

இந்தத் திட்டம் ஆராய்ச்சிக் கட்டத்திலேயே இருக்கிறது. இப்பொழுது தான் இவ்வகை ஆயுதங்கள் சோதிக்கப்பட்டு வருகின்றன. அமெரிக்கா இதில் பகிரங்கமாக ஈடுபட்ட போதிலும் ரஷ்யாவும் விண்வெளி ஆய்வுத் தட்டத்தில் ஈடுபட்டதாக பரவலான கருத்து உள்ளது. கண்டம் விட்டு கணடம் பாயும் ஏவுகலணகளை (Inter Continental Balistic-missiles) எதிரிகள் ஏவிய அடுத்த நிமிடத்தில் கண்டு பிடித்து விண் வெளியிலே தடுத்துவிடுவது இந்த ஆய்வுத்திட்டத்தின் குறிக்கோள்.

இவ்வாறு எதிரிகளின் ஏவுகணைகளை வான் வெளியில் அழிக்க வேண்டுமானால் செயற்கைக் கோள்களில் லேசர் ஆயுதங்களை வைத்து அவைகளை வானத்தில் வலம் வரச்செய்ய வேண்டும். அல்லது பூமியில் இருந்து அனுப்பும் லேசர் கதிர்களை பிரதிபலிக்க விண்வெளியில் பெரிய கண்ணாடியை வலம் வரச் செய்யவேண்டும். இப்படி ஆகப் பல வகையான ஆராய்ச்சிகள் நடாத்தப்பட்டு வருகின்றன. 1989 ஆம் ஆண்டில் இரண்டு சோதனைகள் வெற்றி பெற்றதாக அமெரிக்கா அறிவித்துள்ளது. வேகமாக வந்த ஏவுகணை

ஆயுதத்தை லேசர் ஒளிபாய்ச்சி தாக்கி அழித்ததை முதலில் அறிவித்தது. பின்னர் வெளியான ஒரு செய்தியை 'பிறிவியன் பெப்பின்' என்னும் திட்டத்தை அறிவித்தது. வானத்தில் ஆயிரக் கணக்கான விண்கூடுகள் சுற்றிக் கொண்டிருக்கும். அதில் மிகவும் சத்தி வாய்ந்த 'சென்சா' எனப்படும் உணரும் கருவிகள் இருக்கும். எதிரி நாட்டு ஏவுகணைகள் புறப்பட்ட அடுத்த நிமிடத்தில் இவை அதை உணர்ந்து அதன் மீது மோதி அழித்து விடும். இதற்கான ஒரு சோதனையில் அமெரிக்கா வெற்றிபெற்றது.

அமெரிக்கா இதுவரை சட்டில் விண்வெளி ,ஓடம் மூலம் பல விண்கூடுகளை ஏவியிருக்கிறது. இவைகள் சில வேவுபாரக்கவும், நட்சத்திரப் போர்த்திட்டத்திற்கும் அனுப்பப்பட்டதாகவும் செய்திகள் அடிபடுகின்றன. இருந்த போதிலும் விண்வெளியில் இருந்து ஒளிகற்றையைப் பாய்ச்சுவது அவ்வளவு எளிதல்ல, சிலவகை லேசர் ஒளியை உருவாக்க பெரிய சாதனங்கள் தேவை. இன்னும் சில வலுவான ஒளிகளை ஏற்படுத்த அணுக்குண்டு வெடிக்கும் ஆற்றல் தேவை.

இவைகளை விண்வெளியில் நிகழ்த்த பெரிய ஏற்பாடுகள் செய்யவேண்டும். இத்தனையும் செய்தாலும், துல்லியமாகக் கணக்குப் போட பிரமாண்டமான கணனிகள் (Computers) பலதேவைப்படும். இப்போதைய ஆய்வுகள் வெற்றி பெற்றாலும் *1994* ஆம் ஆண்டுதான் அதாவது இந்த ஆண்டின் இறுதியில் தான் உண்மையான ஆயுதங்களை அதன் நிலையில் நிர்ணயித்து வைக்க முடியும்.

### அதிசய மான்

*வியட்நாமிலுள்ள கிராமவாசிகளுக்குக் காட்டுப் பன்றி மாமிசமென்றால் உயிர். இதற்கு அடுத்தபடியாக அவர்கள் விரும்பிச் சாப்பிடுவது இந்த மான் இறைச்சியைத் தான். இந்த மான் இனம் அதிகளவில் கூட்டம் கூட்டமாகச் செறிந்து காணப்படுவது "உக்காங்" என்ற வட்டாரத்தில்தான். பல ஆண்டுகள் நடைபெற்ற வியட்நாம் போரில், அமெரிக்க குண்டுவீச்சுக்கு அதிஷ்டவசமாகத் தப்பியது இந்த வட்டாரம்தான். அதனால் தான் இயற்கையின் அபூர்வ பரிசாகிய இராட்சத மான் அழிந்துவிடாமல் இப்போதும் அப்படியே இருந்து வருகிறது.*

இனி இந்த விண்வெளிப்போர் ஆய்வுத்திட்டத்திற்கான எதிர்ப்புக் குறித்துக் காண்போம். றொனாலட் றீகன் இத் திட்டம் குறித்து அறிவித்தபோது இது தறகாப்புக் கவசமே அன்றி தாக்குவதற்கான ஆயுதம் அல்ல எனறு கூறினார். ஆனால் இது நடைமுறையில் பயன் படுமா என்பது கேள்விக்குறியே. எனினும், நீர்மூழ்கிக் கப்பல்களிலும், கரையில நடமாடும் வாகனங்களிலும், தாழ்வாகப் பறக்கும் விமானங்களிலும் அணுக்குண்டு பொருத்தப்பட்ட ஏவுகணைகள் உள்ளன. ஆகவே விண்வெளியில் ஏவுகணைகளைத் தடுப்பதால் மட்டும் பலன ஏற்படாது.

இரண்டாவதாக 1967ஆம் ஆண்டு விண்வெளி ஒப்பந்தப்படி எந்த நாடும் விண்வெளியை ஆயுதப்பாவனைக்காகப் பயன் படுத்த முடியாது.

மூன்றாவதாக இந்தத் திட்டத்திற்கு ஏராளமான பொருட் செலவு ஆகிறது. ஏற்கனவே 1500 கோடி டொலர்கள் வரை செலவிடப்பட்டுவிட்டன. அடுத்த ஐந்து ஆண்டுகளில் 3000 கோடி டொலர் தேவை என்று நிர்வாகம் கேட்கிறது. ஆனால் அமெரிக்கக் காங்கிரஸ் பேராயர் மன்றம் தயக்கம் காட்டுகிறது. அல்லது தயங்குகிறது. மேலும் இந்த அயன வெளிப் போர் ஆய்வுத் திட்டம் நாடுகளிடையே புதிய போட்டியினையும் தோற்றுவிக்கும் அபாயம் இருப்பதாக எண்ணப்படுகிறது.

### கனடா நாட்டில் இடம்பெற்ற சம்பவம்

✻ கனடாவில் பரபரப்பை ஏற்படுத்திய வழக்கொன்றில், கொலைகாரன் ஒருவன் என்ன கூறினான் தெரியுமா?

தூக்கத்திலே 25 கி. மீ தூரம் வரை காரை ஓட்டிச் சென்று அம்மாவையும், மாமனாரையும் கத்தியால் குத்திக் கொலை செய்தேன் என்றான்.

தூக்கத்தில் நடப்பவர்களைத் தடுத்தால் அவர்கள் குழப்பமடைந்து, வன்முறையில் ஈடுபடுவோர்கள். அவர்களை அமைதியாகப் படுக்கைக்கு அழைத்துச் சென்று விடவேண்டும் என்றும் மன அழுத்தம் காரணமாகவோ, போதுமான தூக்கமின்மை காரணமாகவோ, இதுபோல் தூக்கத்தில் நடக்கும் சம்பவம் வருமெனமருத்துவர்கள் கூறுகின்றனர்.

# ஆசியாவில் வேகமாகப் பரவும் எயிட்ஸ்

உலகில் எயிட்ஸ் நோயாளிகள் அதிகரித்திருப்பது பற்றி உலக சுகாதார ஸ்தாபனம் (W.H.O.) மீண்டும் எச்சரிக்கை விடுத்திருக்கிறது. உலகில் எயிட்ஸ் நோயால் பீடிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை **1993** ஆம் ஆண்டு **60** சதவிகிதம் அதிகரித்திருப்பதாகவும் ஆசியாக்கண்டத்தில் தீவிர அதிகரிப்புக் காணப்பட்டதாகவும் இவ் ஸ்தாபனம் இப்போது வெளியிட்டிருக்கும் அறிக்கையில் கூறுகின்றது.

இந்த ஸ்தாபனம் 1994/07/01 அன்று வெளியிட்டிருக்கும் அறிக்கையில் எயிட்ஸ் நோயினால் பீடிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 1993 ஆம் ஆண்டில் 60 சதவிகிதம் அதாவது 40 இலட்சம் அதிகரித்திருப்பதாக குறிப்பிட்டுள்ளது.

ஆசியாக் கண்டத்தில் எயிட்ஸ் நோயினால் பீடிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கையில் பெரும் அதிகரிப்பு ஏற்படும் என்று குறிப்பிட்டுள்ளது. இது கடைசியாக வெளியிட்ட கணிப்பின்படி 1983 ஆம் ஆண்டு ஜூலையில் இருந்து எயிட்ஸ் நோயால் பீடிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 08 மடங்காக அதிகரித்துள்ளதாக தெரிவிக்கிறது.

உலகில் மிகக்கூடுதலான நோயாளிகளில் 15 இலட்சம் எயிட்ஸ் நோயாளிகள் ஆபிரிக்கக் கண்டத்தில் இருந்தாலும் இப்போது எயிட்ஸ் நோய் வேறு எங்கிலும் பார்க்க ஆசியாவில் வெகு துரிதமாகப் பரவி வருவதாக உலக எயிட்ஸ் குறித்த இவ் ஸ்தாபனத்தின் உலகளாவிய செயல் திட்டத்தின் இயக்குநர் கூறினார். கடைசியாக வெளியிடப்பட்ட அறிக்கையின்படி ஆசியாவில் 2½ இலட்சம் எயிட்ஸ் நோயாளிகள் இருக்கின்றனர். இந்த எண்ணிக்கை கவலையளிப்பதாக இருக்கின்றது. என்றாலும், மலேரியா, எலும்புருக்கி நோய் ஆகியவற்றால் பீடிக்கப்பட்டோரின் எண்ணிக்கையுடன் ஒப்பீட்டு அளவில் பார்க்கும்போது இது மிகக் குறைவானது.

சென்ற ஆண்டு (1993) உலகில் மலேரியா நோயினால் பீடிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 3 கோடி—5கோடிக்கும் இடையிலானது. அவர்களுள் 15 இலட்சத்திற்கும் 30 இலட்சத்திற்கும் இடைப்பட்டோர் இறந்துள்ளனர். என கணிப்பிடப்பட்டுள்ளது. சென்ற ஆண்டில் (1993) உலகில் காசநோயால் பாதிக்கப்பட்டோரின் எண்ணிக்கை 08 மில்லியன். இவர்களில் 03 மில்லியன் நோயாளிகள் இறந்து விட்டார்கள்.

# பறவை இனங்கள்

பறவைகளில் 9,000 இனங்களிற்கு மேல் உண்டு. இவை உலகின் பல பாகங்களிலும் வசிக்கின்றன. ஆபிரிக்க தீக்கோழி (Ostrich) அவுஸ்திரேலியாவில் வாழும் ஜெனு, தென்அமெரிக்காவைச் சேர்ந்த றிசா, நெதர்லாந்து, பீக்கிங் போன்றவற்றில் வாழும் ஹாசவுறி முதலான பெரிய பறவைகள் நிலத்தில் வாழ்வன. சிறகிருந்தும் பறக்க முடியாத இவை, ஓடும் பறவைகளின் வரிசையைச் சேர்ந்தவையாகும்.

நீர்ப்பறவைகளோடு ஒப்பிடுகையில் நிலத்தில் வாழும் பறவைகளின் எண்ணிக்கையே அதிகம். நீர்ப் பறவைகள் தண்ணீரில் அல்லது நீர் நிலைகளின் அருகே வசிக்கின்றன. முக்குளிப்பாணி போன்ற சில பறவைகள் தண்ணீரில் வளரும் செடிகளில் கூடுகட்டுகின்றன. வேறு சில கடலில் வாழ்பவை. கொக்கு, நாரை, நீர்க்கோழி, உள்ளான், ஆட்காட்டி முதலான பறவைகள் கோடை காலத்தில் நன்னீர் உள்ள குளங்கள், குட்டைகள், ஆறுகள் ஆகியவற்றின் அருகே காணப்படும்.

நாரைகளில் பூநாரை, கருநாரை, மண்நாரை, நத்திகொத்தி நாரை எனப் பலவகையுண்டு. கொக்கு, மடையன், கொட்டான், குருடு, என்பவற்றையும் நாரை என்று சொல்கிறார்கள். நாரைகளுக்கும், கொக்குகளிற்கும், தூயவெண்மை, நீலச்சாம்பல், கருமை முதலான நிறங்களைக் கொண்ட சிறகுகளும், இறகுகளும் தனி அழகைக் கொடுக்கின்றன.

வட துருவத்தில் வாழும் ஒரு வகை ஆற்றுக்குருவி குளிர்காலங்களில் 16,000 மைல் சென்று தென் துருவத்தை அடைந்து அங்கு வ ழும். உலகிலேயே மிகவும் பெரிய சிறகுகளை உடைய பறவை அலையும் அல்பட்றோஸ். இது சிறகுகளை விரித்தவுடன் இரு சிறகுகளின் நீளமும் சுமார் 12அடி வரையில் இருக்கும். இது சிறகுகளை அடிக்காமல் நெடும் தூரம் பறக்கும் ஆற்றல் கொண்டது. காற்று வீசும் திசைக்கேற்றபடி பறப்பதனால் சிறகடிக்க வேண்டிய அவசியம் இப்பறவைக்குத் தேவையில்லை. இக்காரணத்தினால் சிலர் இப்பறவை ய வானில் உறங்கும் வழக்கம் உடையது என்கின்றனர். இதில் எவ்வளவு தூரம் உண்மை என்பது அறியப்படவில்லை.

உலகில் மிகச்சிறிய பறவை மினைபாட். இது கியூபாவில் இருக்கிறது. மிகவேகமாகப் பறக்கும்

ஆற்றல் கொண்டது. வினாடிக்கு கால் மைல் தூரம் பறக்கும். ஆபிரிக்காவில் தேன் சேர்ப்பவர்கள் தேன் இருக்கும் இடத்தைக் கண்டறிவதற்குத் தேன் காட்டி என்ற பறவையைப் பயன்படுத்துகின்றார்களாம். இப் பறவை குயிலைப் போன்று வேறுபறவையின் கூட்டிலேயே முட்டையிடும்.

நெருப்புக்கோழி ஆபிரிக்காவில் அதிகமாகக் காணப்படுகிறது. இது 6 முதல் 8 அடி வரை உயரமானது. சுமார் 300 இறாத்தல் எடையுடையது. உலகிலேயே மிக வேகமாக ஓடும் பறவை இது தான். மணிக்கு 35 மைல் வேகத்தில் ஓடும்.

## தூக்கத்தில் நடக்கும் வியாதி

★ ஆஸ்திரேலியா நாட்டில் பெரும்பான்மை மக்களுக்கு இருக்கும் வியாதி தூக்கத்தில் நடக்கும் வியாதிதான். தூக்கத்தில் நடப்பவர்கள் பலமுறை பெரியவிபத்தில் சிக்கி விடுகின்றனர். சில நேரங்களில் கொலை கூடச் செய்து விடுகிறார்களாம். தூங்கி எழுந்தபின் என்ன நடந்ததென இவர்களுக்கு நினைவில் இருப்பதில்லை. இது போல் தூக்கத்தில் நடக்கும் வியாதி உள்ள பலர் இப்போது தங்கள் படுக்கை அறையைப் பூட்டிக் கொண்டு படுத்துக் கொள்கின்றனர் ஆஸ்திரேலியாவில் தூக்கத்தில் நடக்கும் வியாதி உள்ளவர்கள் இந்த ஆண்டு சந்தித்த விபத்துக்கள்.

★ 45 வயதான ஒருவர் தூக்கத்தில் நடந்து மூன்றாவது மாடி பல்கணி வழியாகக் கீழே விழுந்தார் அவரின் மண்டையோடு உடைந்தது.

★ சிகரெட் வாங்கப்போகிறேன் என்று தூக்கத்தில் முணுமுணுத்துக் கொண்டு சென்ற இளைஞன் ஒருவன் கடுகதி புகைவண்டியுடன் மோதி அடிபட்டான்.

★ முதியவர் ஒருவர் தூக்கத்தில் நடந்து சென்று கடலில் வீழ்ந்ததால், பாறையில் மோதி அடிபட்டு அவரது மண்டையும், இரண்டு கால்களும் உடைந்தன.

சென்னை நூலகம் / மா நகர சபை / யாழ்ப்பாணம்

அமெரிக்காவில் நடந்த 15-வது

# கால்பந்துப்போ

52 போட்டிகள், 80 மணி நேர ஆட்டங்கள் 141 ஹோல்கள் இவைகளுடன் மழை அடித்து ஓய்ந்ததுபோல ஓய்ந்துள்ளது ஒரு கால்பந்தாட்டம்.

கடந்த ஒரு மாத காலமாக உலகில் கால்பந்து காய்ச்சலைத் தோற்றுவித்த உலக கால்பந்தாட்டம் ஒரு வழியாக முடிந்திருக்கிறது. யாரும் அதிகமாக நினைத்துப் பார்க்காத பிறேஸில் அணி கோப்பையைத் தட்டிச் சென்று வீடு போய்ச் சேர்ந்து விட்டது. பலரின் யூகங்களையும் கணிப்புக்களையும், பொய்யாக்கி பிறேஸில் இன்னும் 4 வருடங்களுக்கு உலகின் முதலாம் தர கால்பந்தாட்ட அணி தாம் என்ற பெருமையைத் தோற்றுவித்துள்ளது.

உலகின் கால்பந்தாட்டக் (man of the match) கதாநாயகன் டினோ பாகியோ என்றாகிவிடும் என சில ஜம்பாவான்களின் கனவைக் கலைக்கச் செய்துள்ளார் பிறேஸில் நாட்டு வீரர் ரொமாறியோ. ஆர்ஜன்டீனாவின் ஹம்பர், டியாஹோ மரடோனா, இத்தாலியின் பவலோறோசி, சர்வதேச வரிசையில் இப்போது பிறேஸிலின் ரொமாறியோ. பாகியோ தோல்வி கண்டது மட்டுமல்ல, தான் அமைதிக்காக பௌத்த மதத்தில் சேர்ந்துள்ளார் என்று அறியப்படுகிறது. ஆனால் பௌத்தமதத்தில் சேர்ந்த அவர் தற்போதைய தோல்விக்கு அமைதிகாண வேற்று மதம் காண வேண்டியதுதான்.

பிறேஸில் 24 ஆண்டுகளுக்குப் பிறகு கோப்பையை வென்றிருப்பது மட்டுமல்ல. 4 தடவைகள் உலகக் கோப்பையை வென்ற ஒரே அணி பிறேஸில் அணி என்ற பட்டத்தையும், பெருமையையும், சாதனையையும் நிகழ்த்திக்காட்டியிருக்கிறது பிறேஸில். இந்தச் சாதனையைக் கொண்டாட நாட்டில் நடந்த மகிழ்ச்சிக் கொண்டாட்டத்தை வார்த்தையில் வர்ணிக்க இயலாது. கோப்பையுடன் வந்து இறங்கிய பிறேஸில் அணியை வர

வேற்க நகரங்களில் இலட்சக்

ஒரு நிகழ்வும் இல்லாவிட்டாலும்

# உலகக் கிண்ண போட்டி


**உலகின் முதன்மைக்**
**கால்ப்பந்தாட்ட அணி பிறேஸில்**

பிறேஸில் நாட்டு வீரர் ரொமா

இறங்கிய பிறேஸில் அணியை வர

வேற்கு நகரங்களில் இலட்சக் கணக்கான மக்கள் திரண்டனர். திரண்டது மக்களா? அல்லது தேர்தலில் வாக்களிக்கப் போகும் வாக்குகள் எனக் கணக்கிட்ட அரசியல்வாதிகள் பிறேஸில் அணி வந்து இறங்கிய தினத்தை தேசிய விடுமுறை தினமாக அறிவித் தனர். அந்த அளவிற்கு கொண் டாட்டம். பிறேஸில் நாட்டில்

ஒரு நிகழ்வும் இல்லாவிட்டாலும் ஆட்டம் போடும் கலாச்சாரம் கொண்ட பிறேஸில் நாட்டில், பிறேஸிலின் வெற்றியைக் கேட் டுத் தெருவில் இறங்கி நடாத்திய ஆட்டத்தை கூறவேவேண்டாம். வாணவேடிக்கை, நடனம், நீர்க் குடி யென அமர்க்களப்படுத்தி விட்டனர் பிறேஸில் மக்கள். மகிழ்ச்சி ஆர்ப்பாட்டம் பிறே




ளில் நாட்டில் மட்டுமா? உலகின் பல பகுதிகளுக்கு ஏன் போக வேண்டும். இந்தியாவில் குறிப்பாக கல்கத்தா நகரை எடுத்துக் கொள்ளுங்கள், ஞாயிற்றுக் கிழமை இரவு அதாவது பிறேஸில் அணி வெற்றி பெற்ற அன்றைய இரவு வாண வேடிக்கைத் திருநாள் போல் நடந்ததாக செய்திகள் சொல்கின்றன. கல்கத்தாவில் வெறிபிடித்த இரசிகர் கும்பல் கல்கத்தாவினை மகிழ்ச்சி வெள்ளத்தில் ஆழ்த்தியள்ளது. அருகாமையில் இருக்கும் வங்காள தேசத்தில் இதே கதிதான் என்று சொல்லப்படுகின்றது. பிரேஸில் அணிக்கு உலகக் கோப்பை கிடைத்தது மட்டுமல்ல மற்றொரு சுபசெய்தியும் பிறேஸிலுக்கு வந்து சேர்ந்தது. அதாவது உலக கால்பந்து போட்டி நடந்த நேரத்தில் சர்வதேச கால்பந்து அமைப்பின் எவ். ஐ.எவ்.ஏ (Federation of international Foot Ball Association- உலககால்பந்தாட்டச் சம்மேளம்) பொதுக்குழு சிக்காக்கோ நகரில் கூடியது. இதில் 78 வயதுடைய பிறேசில்நாட்டுக்காரர் ''ஹவ்லாங்கே'' மீண்டும் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டார். 6-வது முறையாக உலகக் கால் பந்து அமைப்பின் தலைவராக தெரிவுசெய்யப்பட்டு, அவர் சாதனை படைத்துள்ளார். தெரிவு செய்யப்பட்ட ஹவ்லாங்கே 1998-ஆம் ஆண்டு பிரான்ஸ் நாட்டில் நடைபெறப் போகும் உலகக்கோப்பைக் கால் பந்து ஆட்டம் 24 அணிகளுக்குப் பதிலாக 32 அணிகள் ஆடும் என்ற மகிழ்ச்சி அறிவிப்பொன்றையும் வெளியிட்டுள்ளார்.

அடுத்து விளையாட்டுக்கு வருவோம். வெற்றி பெற்ற வீரருக்குப் பரிசு வழங்குவதில் எங்களை யாரும் மிஞ்ச முடியாது என தெரிவித்துள்ளது சவுதி அரேபியா. உலக கால் பந்தாட்டத்தின் முதல் சுற்றில் சவுதி அரேபியா வெற்றி பெற்றது. இதற்காக அணியின் ஆட்டக்காரர் ஒவ்வொருவருக்கு ஒரு மேர்சிடிஸ் பென்ஸ் கார் பரிசு வழங்கப்படுமென அறிவித்துள்ளது சவுதி அரேபியா. இந்த வகையில் சவுதிஅரேபியா மட்டும் உலகக் கோப்பையை வென்றிருந்தால் என் சாம்ராஜ்யத்தின் பாதியைத் தருகிறேன் என்று மன்னர் ''பாத்'' அறிவித்திருப்பாரோ என்னவோ.

சவுதி அரேபியா விளையாட்டை இப்படி ஊக்குவிக்கிறதென்றால், ஈரான் எப்பொழுதுமே உள்ள தனது பிற்போக்குத் தனத்தை உலக கால்பந்தாட்டத்திலும் காட்டி விட்டது. மதப் பழமை வாதிகளின் பிடியில் இருக்கும் ஈரானில் முதன்முறையாக தற்போதுதான் உலககால் பந்துப்போட்டி நேரடி ஒலிபரப்புச் செய்யப்பட்டது. பாருத

என்ற முஸ்லிம் சட்டமுறையைக் கடுமையாகச் கடைப் பிடிக்கும் நாடு ஈரான். கால்பந்தாட்ட போட்டியைத் தொலைக்காட்சியில் காட்டும்போது அமெரிக்காவில் பார்வையாளர்கள் அமர்ந்திருக்கும் கலரியில் அரைகுறை ஆடைகள் சகிதம் சுதந்திரமாக காற்றாட அமர்ந்திருக்கும் ரசிகைகளையும் கமராபடமெடுக்கிறது. இதுபோன்ற காட்சிகள் ஈரான் தொலைக்காட்சியில் இடம்பெறுவதில்லை. இது மத விரோத மானது என்கிறது ஈரான். எனவே ஆட்டம் தவிர பார்வையாளர்கள் பகுதியை கமரா குளோசப்பில் காட்டும் போது அதை ஈரானிய மக்கள் பார்க்கக் கூடாது என்று அதிகாரிகள் இந்தக்காட்சிகளை வெட்டி விடுகின்றனர் உலககோப்பையை பிறேஸில் வெல்லலாம் ஆனால் பிற்போக்குத்தனத்துக்கான கோப்பை எங்களுக்குத்தான் என்கிறது ஈரான்.

டின் எதிர்க்கட்சிகள் அரசிற்கெதிராக ஒரு நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டுவர முயற்சித்தனர். ஆனால் நாட்டில் உள்ள பொது மக்கள் அனைவரும் கால் பந்தாட்டப் போட்டியில் கவனம் செலுத்தி வருவதால் நம்பிக்கையில்லாத் தீர்மாணத்தையே ஒத்திப்போடலாமென எதிர்க்கட்சிகள் முடிவு செய்தன. அந்தளவிற்கு நாட்டின் அரசியலையே பாதித்துள்ளது. எத்தகைய பகையுணர்ச்சியையும் விளையாட்டுப் போட்டி தவிடுபொடியாக்கிவிடும் என்பதை அமெரிக்காவே நிருபித்துள்ளது. நைஜீரிய விமான சேவைக்கு விதிக்கப்பட்டிருந்த தடையை அமெரிக்கா விலக்கிக் கொண்டுவிட்டது. உலகக் கோபைப் போட்டியில் முதன் முறையாக மூன்று ஆபிரிக்க நாடுகளைச் சேர்ந்த அணிகள் கலந்து கொண்டன ஆபிரிக்க அணிகள் அமெரிக்கா வரவும், ரசிகர்கள் உலகக் கோப்பைப் போட்டியைக் காண அமெரிக்காவிற்குப் பய



உலகக் கால் பந்தாட்டம் மதத்தை மட்டுமல்ல, உலக நாடுகளின் அரசியலையும் விட்டு வைக்க வில்லை. உலகக்கோப்பை நடந்திருக்கும் நேரம் தாய்லாந்து நாட்...



போட்ட வீரர் ''அன்ரஸ் எக்ஸ கபோர்'' கொலம்பியாவில் படுகொலை செய்யப்பட்டார். கொலம்பிய வீரர் எக்ஸ கபோர் கொலை செய்யப்பட்டதானது யாரையும் அதிர்ச்சியடையவைத்திருக்கும். கொலம்பிய அணியின் தோல்விக்கு அன்ரஸ் போட்ட சேம்சைட் கோல்தான் காரணம் எனக் கருதப்பட்டது. இதற்காக ''அன்ரஸ் எக்ஸ்கபோர்'' மிகவும் மனவருத்தப்பட்டார். இந்த வருடத்தின் மத்தியிலேயே கொலம்பிய அணி அமெரிக்காவிலிருந்து தோல்வி முகத்துடன் கொலம்பியா திரும்பியது. இரவு விடுதிக்குச் சென்றிருந்த எக்ஸ் கபோரை சூழ்ந்துகொண்டு சில நபர் மது அருந்தினர். அவர்களிடையே கொலம்பிய அணி ஏன் தோல்விகண்டது குறித்து வாக்குவாதம் நடந்தது. வாக்குவாதம் முற்றியதில் கோபமடைந்த ஒருவர் துப்பாக்கியால் எக்ஸ்கபோரை 12 தடவைகள் சுட்டார். எக்ஸ்கபோர் உயிர் துறந்தார். மெடலின் நகர கூடைப் பந்து அரங்கத்தின் நடுவில் சவப்பேழையில் எக்ஸ் கபோரின் உடல் கிடத்தப்பட்டது. மீளா நித்திரையில் ஆழ்ந்து போனார் பிரபல கால் பந்து வீரர் எக்ஸ்கபோர். இதன்மூலம்

ணத்தை மேற்கொள்வதற்கும் வசதியாக நைஜீரியா விமானச் சேவைக்கு விதிக்கப்பட்டிருந்த தடையை அமெரிக்கா விலக்கிக் கொண்டது.

சரி இனி மீண்டும் உலகக் கோப்பை மைதானத்திற்கு வருவோம். இம்முறை உலகக் கால் பந்து தொடங்கியதிலிருந்து, உலகக் கால்பந்து அரங்கம் தொடர்ந்து அதிர்ச்சிக்கு மேல் அதிர்ச்சி. போட்டி தொடங்கிய போதே அமெரிக்காவின் முன்னாள் கால்பந்து நட்சத்திரம் சின்சன் கொலைக் குற்றச்சாட்டின் பேரில் கைதுசெய்யப்பட்டார். அடுத்ததாக ஆர்ஜன்ரீனா நாட்டுக் கால்பந்து நட்சத்திரம் பிரபல வீரர் ''டியாஹோ மரடோனா'' போதைப் பொருள் உட்கொண்டார் என்று சொல்லப்பட்டு வெளியேற்றப்பட்டார். இந்த அதிர்ச்சி அலை அடங்குவதற்குள்ளேயே அமெரிக்க அணியுடனான ஆட்டத்தில் தவறுதலாக சேம்சைட் கோல்

கால் பந்தாட்டம் ஒரு கொலை வெறி ஆட்டத்தின் நுழைவாயில் என்றே எண்ணத் தோன்றுகின்றது. கால்பந்தாட்டத்தை நீங்களும் பார்க்கலாம் நானும் பார்க்கலாம் ஆதறகாகத் திருடர்களும் சிறையில் உள்ள குற்றவாளிகளும் ரசித்துப் பார்க்கவேண்டுமென்ற கட்டாயமில்லை இல்லையா? சிறையில் உள்ள அதிகாரிகள் தங்களை மறந்து தொலைக் காட்சியைப் பார்க்கையில் திருட்டு ஆசாமிகள் பயமில்லாமல் கைவரிசை காட்டிய சம்பவம் தாய்லாந்து நாட்டில் மட்டுமல்ல ஜேர்மனியிலும் கூட நடந்துள்ளது. பல சம்பவங்களை இதற்காகக் கூறலாம். எனவே கால்பந்தாட்டம் அதிகாரிகளை வாயடக்க மட்டுமல்ல கண்ணையும் குருடாக்கியிருக்கிறது. கால் பந்தாட்டம் கொலைகளை மட்டுமல்ல பல இறப்புக்களையும் பயங்கரவாதங்களையும் சந்தித்தது. குறிப்பாக வலிமைமிக்க இத்தாலி அணியை முதன் முதலாக வென்று காட்டியது அயர்லாந்து. இந்த ஆட்டத்தை தொலைக் காட்சியில் பார்த்துக் கொண்டிருந்த ரசிகர்கள் புரட்டஸ்தாந்து எனப்படும் கிறிஸ்தவத் தீவிரவாதிகள் துப்பாக்கியால் சுட்டதில் 6 பேர் உயிரிழந்தனர். இப்படி இந்த சோகச் சம்பவத்தையடுத்து வெற்றிக்கோலாகலம், அமர்க்களமாக மாறியது. பயங்கரவாதம் மட்டுமல்ல, தங்களின் அபிமான அணி கண்ட தோல்வியால் அல்லது வெற்றியின் மகிழ்ச்சியால் உயிரை மாய்த்தவர்களும் உண்டு. பிறேஸிலுக்கும், ரஷியாவிற்குமிடையே நடந்த முதற் சுற்றுப் போட்டியை டெனடவுஸ் என்பவர் தொலைக்காட்சியில் கண்டு கொண்டிருந்தபோது, பிறேஸில் அணியின் வீரர் 'றொமாறியோ' கோல் அடிக்க ஆனந்தவெள்ளத்தில் திளைத்த டென்டவுஸ் மகிழ்ச்சியால் மாரடைப்பேற்பட்டு உயிர்துறந்தார். இப்படி நைஜீரியாவில, வங்கதேசத்தில் எனப் பல சம்பவங்களைச் சொல்லலாம்.

மொத்தத்தில் நான்கு ஆண்டுகளுக்கு ஒரு தடவை நடக்கும் உலகக் கோப்பைக் கால் பந்துப் போட்டி துவங்கி முடிந்துவிட்டது. அடுத்த போட்டி பிரான்ஸில் நடக்கப்போகிறது. 2,002 இல் இந்தப் போட்டியை நடாத்திக் காட்ட ஜப்பான் வரிந்துகட்டுகிறது. ஆனால் நான் நடத்துகிறேன் என்கிறது தென்-கொரியா இதுவரை நடந்த போட்டிகளிலேயே மிகப் பிரமாண்டமாக நடந்த போட்டி அமெரிக்காவில் நடந்த தற்போதைய போட்டி தான் என்று சொல்லப்படுகிறது. இது அமெரிக்காவிற்கு மட்டுமல்ல கால் பந்தாட்ட ரசிகர்களுக்குப் பெருமைதான் இல்லையா?

# கல்யாணி

## கிறீம் ஹவுஸ்

- ஐஸ்கிறீம் வகைகள்
- ஐஸ் கோப்பி
- ஐஸ் ஜொலி
- சொக்கலட் கிறீம்
- குளிர்பான வகைகள்

என்பவற்றிற்கு

## கல்யாணி கிறீம் ஹவுஸ்

பிறந்தநாள் நிகழ்வுக்கேற்ப கேக் வகைகளுக்கும்
மற்றும் உங்கள் இல்லங்களில் நடைபெறும்
மங்களகரமான நிகழ்வுகள் எதுவாக
இருந்தாலும்
சுவைமிகு சிற்றுண்டி வகைகளை
குறித்த நேரத்தில் ஓடர்செய்து தரமாகவும்,
சுவையாகவும் தயாரித்துப் பெற்றுக்கொள்ள

**இன்றே நாடுங்கள்**

**கல்யாணி கிறீம் ஹவுஸ்**

இல. 73, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

# வினாக்களும் விடைகளும்

*ஐ. நா. சபையிலே இந்தியா எந்த ஆண்டிலே சேர்ந்தது?*

*இலங்கை எந்த ஆண்டிலே சேர்ந்தது?*

*இந்திய ஐ. நா. குழுவில் எத்தனை பேர் பணியாற்றுகிறார்கள்? இலங்கை அணியில் எத்தனை பேர்?*

☐ இந்தியா ஐ. நா. வில் 1945 ஆம் ஆண்டில் அனுமதிக்கப்பட்டது. இலங்கை 1955 ஆம் ஆண்டு அனுமதிக்கப்பட்டது. 1992, 1993, 1994 இந்த மூன்று ஆண்டுகளுக்கும் ஐ. நா. மன்றத்தின் வரவு செலவுத் திட்டத்திற்கான இந்தியாவின் சதவிகிதப் பங்களிப்புக்கென கணிக்கப்பட்ட தொகை மொத்தத் தொகையில் 0.36 ஆகும். இலங்கையின் பங்களிப்பு 0.01 ஆகும். ஐ. நா. மன்றத்திலுள்ள இந்தியக் குழுவில் 19 உறுப்பினர்களும், அதன் உயர் தூதுவராக முஹமட் ஹமீத் அன்சாரி அவர்களும், தூதுவர் ரி. பி. ஸ்ரீநிவாசன் அவர்களும் உள்ளனர்.

இலங்கைக்குழு 07 உறுப்பினர்களைக் கொண்டது. இலங்கைக்கான உயர் தூதுவராக டாக்டர் ஸ்ரான்லி கல்பகே அவர்களும் தூதுவராக டீ.ஈ நிஹால்ரொட்றிக்கோவும் உள்ளனர்.

*ஐ. நா. வில் இதுவரை பொதுச் செயலாளர் பதவி வகித்தவர்களின் பெயர்கள் என்ன?*

☐ நோர்வே நாட்டைச் சேர்ந்த திரிக்வீலி 1946 1953 வரை. சுவீடன் நாட்டைச் சேர்ந்த டாவ் ஹமர்ஷீல்ட் 1953-1961 வரை. பர்மாவைச் சேர்ந்த யூதாண்ட் 1961 - 1971 வரை. ஆஸ்திரிய நாட்டைச் சேர்ந்த ஹேர்ட் வால்ட்ஹைம் 1971-1981 வரை. பேரு நாட்டைச் சேர்ந்த பெரஸ் டி கொயிலர் 1981-1991 வரை. தற்போது எகிப்து நாட்டைச் சேர்ந்த டாக்டர் பூற்றோஸ் பூற்றோஸ் காலி 1992 ஆம் ஆண்டு தொடக்கம் பதவி வகித்து வருகிறார்.

*ஐ. நா. வில் ஏன் எந்தவொரு நாட்டையும் உடனடியாக உறுப்பு நாடாகச் சேர்ப்பதில்லை? பாதுகாப்புச் சபை இருக்கிறதே அது அவசியம் தேவை தானா?*

☐ ஐ. நா. மன்றத்தின் சாசனத்தையும், சமாதானமாகச் சேர்ந்து வாழ்வதென்ற அதன் தத்துவத்தையும் ஏற்றுக்கொள்ளும் எந்த நாடும் ஐ. நா. மன்றத்தின் உறுப்பு நாடாகச் சேர்ந்து கொள்ளலாம், பாது

காப்புச்சபையின் பரிந்துரையின் பேரில்பொதுச்சபையினால் புதிய உறுப்பினர்கள் அனுமதிக்கப்படுகின்றனர். ஐ நா. அமைக்கப்பட்ட ஆரம்பத்தில் 51 உறுப்பு நாடுகளிருந்தன. ஆனால் இன்று உறுப்பு நாடுகளின் மொத்த எண்ணிக்கை 185 ஆக அதிகரித்திருக்கின்றது. பாதுகாப்புச் சபை ஐ. நா.வின் ஒரு மூத்த முக்கிய அங்கம் உலகில் அமைதியையும், பாதுகாப்பையும் நிலைநாட்டுவது இதன் முக்கிய பொறுப்பும் பணியுமாகும். எனவே பாதுகாப்புச் சபை முக்கியமானதாகக் கருதப்படுகின்றது.

ஒரு மனிதனின் பிடரி தாக்கப்பட்டால் அவர் இறந்து விடக்கூடியமைக்கான காரணம் என்ன தெரியுமா?

மூளையில் மூளையம், முளிநீள்வளையம் என்பன காணப்படுகின்றன. நீள்வளைய மையவிளையம், அதில் சுவாசம், இதயத்

## மனநிலையில் மாற்றம் வேண்டும்

ஒரு மண்புழுவொன்று மண்ணுக்குள் பதுங்கிப் பதுங்கி வாழ்ந்து வந்ததாம். ஏனென்றால் கோழியைக் கண்டு அஞ்சி நடுங்கியது. சித்தர் ஒருவர் இதனைக் கண்டு இரக்கம் கொண்டு, தன் தவவலிமையால் கோழியாக மாற்றினார். மண்புழு கோழியாக மாறியது. ஆனால் கோழியாக மாற்றப்பட்ட மண்புழு பூனையைக் கண்டு நடுங்கியது, எனவே சித்தர் கோழியைப் பூனையாக மாற்றினார்.

மண்புழு கோழியாகி, கோழி பூனையாக மாறியது. பூனை நாயைக் கண்டு அஞ்சி நடுங்கியது, எனவே சித்தர் பூனையை நாயாக மாற்றிவிட்டார். நாய் மனிதனைக் கண்டு அஞ்சி நடுங்கியது, ஆகவே சித்தர் அதனை மனிதனாக மாற்றினார்.

மண்புழு முதலில் கோழியாக மாறி, கோழி பூனையாக மாறி, பூனை நாயாக மாறி, நாய் மனிதனாக மாறிவிட்டது சித்தரால். ஆனால் அந்த மனிதனுக்கோ இருட்டைப் பார்த்தால் ஒரே பயம், அமைதியைக் கண்டால் ஒரே பயம், வெளிச்சத்தைப் பார்த்தால் ஒரே பயம், சத்தத்தைக் கேட்டால் ஒரே பயம். எனவே சித்தர் அம் மனிதனை மீண்டும் மண்புழுவாக்கினார். அஞ்சுபவர் அன்றாடம் செத்துக் கொண்டிருப்பர். முழுமையாக வாழ வேண்டுமா? மனநிலையில் மாற்றம் வேண்டும்.

துடிப்பு என்பவற்றைக் கட்டுப்படுத்துகின்றது. இந்தநீள்வளைய மையவிளையமும் பிடரிப்பகுதியில் அமைந்திருப்பதனால், பிடரியில் அடிபடும்போது நீள்வளைய மையவிளையம் செயலிழந்து போகின்றது. இதனால் சுவாசம் இதயத்துடிப்பு நிறுத்தப்படுகின்றது பிறகு இறப்புத்தான்.

*பறக்கும் தட்டு இருப்பதாகக் கூறப்படுவது உண்மையா?*

☐ இதனை சிலர் கண்டதாகக் கூறுகின்றனரே தவிர அறிவியல் ரீதியாக நிரூபணமாகவில்லை. ஆனால் பறக்கும் தட்டு என்னும் சொல்லாட்சி 1946 ஆம் ஆண்டு தொடக்கம் நடைமுறையிலுள்ளது.

*ஒரு தொழிற்சாலையில் காது கேளாதவர்கள் வேலை செய்கின்றனர். அந்தத் தொழிற்சாலை அமைந்துள்ள நாடு தெரியுமா?*

☐ அமெரிக்க நாடு.

*ஆகாயத்தில் சென்று தீ அணைக்கும் விமானதைக் கண்டு பிடித்தவர் யார் தெரியுமா?*

☐ ரஷ்ய விஞ்ஞானிகள்.

*உலகில் முதன் முதலில் மீன் பிடிப் படகுகளை பயன்படுத்தியவர்கள் யார்?*

☐ எகிப்திய நாட்டவர்கள்

*சிலந்திகளில் பல வகையான சிலந்திகள் உள்ளன. அவற்றில் மனித உயிர்களைக் கொல்லும் சக்தி கொண்ட சிலந்தி வாழும் நாடு எது?*

☐ அமெரிக்கா.

*உலகில் புகையிரத சேவையை முதன் முதலாக ஆரம்பித்து வைத்த நாடு எது என்று தெரியுமா?*

☐ இங்கிலாந்து.

இது 1820 ஆம் ஆண்டு 38 பெட்டிகளுடன் புகையிரத சேவையை முதன் முதலில் ஆரம்பித்தது.

## மாசு படிந்துள்ளதா?

*பூமியில் வாயுமண்டலம் மாசு அடைந்துள்ளது என்று சொல்கிறார்களே எப்படி? ஏன்? உண்மையா?*

☐ பூமியின் வாயு மண்டலமானது மிகவும் மோசமான அளவுக்கு மாசு அடைந்து போயுள்ளது. உண்மையிலும் உண்மை. இந்தத் தகவலை அண்மையில் அமெரிக்க விண்வெளி ஓடம் டிஸ்கவரியில்(Discovery) பயணம் செய்த அமெரிக்க விண்வெளி வீரர்கள் தெரிவித்துள்ளனர். பூமியின் வாயு மண்டலமானது இவ்வளவு மோசமாக அழுக்கடைந்திருப்

பதை இதற்கு முன்பு நான் பார்த்ததே இல்லை என்று ஜேம்ஸ் பிக்ஹிலி என்னும் விண்வெளி வீரர் கூறினார். இவ் விண்வெளி ஓடத்தில் நான்கு முறை விண்வெளிக்குச் சென்று திரும்பியவர் இவர்.

விண்வெளி ஓடத்தில் இருந்தபடி அமேசன்நதிப் படுக்கையைப் புகைப்படம் எடுத்ததாகவும், அங்கு வாயுமண்டலம் எவ்வளவோ அழுக்காக உள்ளது என்பதை அந்தப்படம் நன்கு சித்தரித்ததாகவும் ஜான் குரேட்டன் என்னும் விண்வெளி வீரர் கூறினார் இவர் டிஸ்கவரிவிண்வெளி ஓடத்தில் சென்ற குழுவின் தலைவர் ஆவார். அமேசனின் வாயு மண்டலத்தை ஒரு கத்தியைக் கொண்டு தான் கிழிக்கவேண்டும். அந்த அளவிற்கு அது அழுக்குச் சேர்ந்துள்ளது என்று அவர் சொன்னார். அமேசன் காட்டுப் பகுதியில் பல இடங்கள் தீக்கிரையாக்கப்பட்டு அழிக்கப்படுவது தான் காரணம் என்று இவர் சொல்கிறார். விண்வெளியில் இருந்தபடி தொலைநோக்கி மூலம் பார்த்தபோது குவைத்தில் எரிந்து கொண்டிருக்கும் எண்ணெய்க் கிணறுகளில் மூண்டுள்ள புகைப்படலத்தை பார்க்க முடிந்ததாம்.இவ்வாறு அமெரிக்க விண்வெளி வீரர்கள் கூறியிருக்கின்றனர். பூமி 30பாகை வட அச்சர ரேகையிலிருந்து 30 பாகை தென் அச்சர ரேகை வரையிலான பிரதேசத்தின் மீது திட்டுத்திட்டான மாசுப்படலங்கள் காணப்படுவதாகும், அண்மையில் பல எரிமலைகள் தீக்குழம்பைக் கக்கியதால் ஏற்பட்ட மாசுப்படலமாக இது இருக்கக்கூடும் என்று இவர்கள் கூறினர். குறிப்பாக பிலிப்பைன்ஸில் மெகான் பினேட்போ என்னும் எரிமலை வெடித்தது பற்றி அவர்கள் குறிப்பிட்டனர். பூமத்திய ரேகையின் இருபுறமும் ஆயிரக்கணக்கான கிலோமீற்றர் பகுதியில் இந்த மாசுப்படலம் காணப்படுவதாகவும் அவர்கள் கூறினர். பூமியின் வாயு மண்டலம் மாசு அடைந்துள்ளது என்பது உண்மையிலும் உண்மை. நாம் இதற்கு எந்தளவில் பொறுப் பேற்கிறோம். இந்த மாசடைந்த வாயு மண்டலத்தை மேலும் மாசடையாமல் பாதுகாக்க நாம் ஒவ்வொருவரும் என்ன செய்யலாம் என்பதைச் சிந்திப்போமா?

*டைனோசர் (Dinnsaur) என்ற விலங்கைப் பற்றி சிறு விளக்கம்கூறுக?*

☐ 75 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்னர் பூமியை ஆக்கிரமித்த இந்த இராட்சத விலங்குகள், படிப்படியாக பரிணாம வளர்ச்சியடைந்து பறவைகளாக இன்று சிறகடிக்கின்றன என புதிய கண்டுபிடிப்பினை வெளியிட்டிருக்கிறார் அமெரிக்க விஞ்ஞானியான ஜோக்ஹானர் என்பவர். ஜோக்ஹானர் டைனோசர் பற்றிய ஆராய்ச்சியின் பிதாமகனாகக் கருதப்படுபவர்.

அமெரிக்காவின் மான்தனாவா மாநிலத்தில் அதிகமாக அகழ்வாராய்ச்சிகள் செய்து டைனோசர்களின் புகைப் படிவங்களை கண்டெடுத்து ஆய்வுகள் நடாத்தி வருகிறார். இத்துறையில் மற்றைய விஞ்ஞானிகள் பிரமாண்டமான டைனோசர் படிவங்களையும், எலும்புக் கூடுகளையும் தேடிக்கொண்டிருக்க ஹானர் மட்டும் குட்டி டைனோசர்களிடம் ஈடுபாடு காண்பித்தார்.

அறணை போன்ற அமைப்பில் சுமார் ஒரு டசின் டைனோசர் கூடுகள் இவருக்கு அகப்பட்டன. அவற்றின் பொரியாத முட்டைகளும், புத்தம் புதிய தாய் பொரித்த குஞ்சுகளுமாக டைனோசர் குடும்பங்கள் வடிவமாகக் கிடைத்தன. பாறையோடுபாறையாக ஒட்டிக்கிடந்த சில டைனோசர்களின் எலும்புகளின் படிவுகளை ஹாற்செனியின் உதவியுடன் ஆராய்ந்தார் ஹானார்.

இந்த ஜோக்ஹானர் என்பவர் மின்காந்த அலையைக் கொண்டு தசைகளையும், எலும்புகளையும் வேறுபடுத்திக் கவனித்தார்.

டைனோசர்களின் வாழ்க்கை முறைபற்றியும் பரிணாமவளர்ச்சி குறித்தும் நிறையத் தெரிய வந்தது. இவருக்கு இளம் டைனோசர்களின் உடல் கூறு அமைப்பு இன்று உள்ள பறவைகளின் உடல் கூற்று அமைப்பை ஏறத்தாள ஒத்திருந்தது. இயற்கையினால் வரம் அளிக்கப்பட்டு வளர்ந்த இந்த டைனோசர் விலங்குகள், எலும்புக்கூடு அமைப்பிலும் உடல்சூடு ஒற்றுமையினால் கூடுகட்டி முட்டையிட்டு குஞ்சு பொரிக்கும் பழக்கத்திலும் பறவைகளை ஒத்திருக்குகின்றன என்பது ஹானரின் ஆராய்ச்சி முடிவு.

### சிந்தனை

ஒரு சமயம் முல்லா நசுருதின் குடிபோதையுடன் பேரூந்தில் ஏறி அமர்ந்தார். ஒரு வயதான பெண்மணி அவர் அருகில் வந்து அமர்ந்தார். முல்லாவின் இரக்கத்திற்குரிய நிலையைக் கண்டு கருணை ததும்பும் நிலையில் அப்பெண்மணி நசுருதினுக்குச் சொன்னார். இந்த நேரத்தில் நேராக நரகத்திற்குச் செல்ல நீயே காரணமாய் யுள்ளாய் இதன் விபரம் உனக்கு புரியவில்லையா என்று வினாவினார். முல்லா நசுருதின் இதைக் கேட்டு துள்ளிக் குத்தார். மேலும் ஓட்டுனரைப்பார்த்து நிறுத்து சகோதரா நிறுத்து நான் தவறாகத் தப்பான எண் கொண்ட பேரூந்தில் ஏறி அமர்ந்து விட்டேன். ஏன் என்றால் அந்த முதியவள் நீ நரகத்திற்கு செல்லும் பாதையை நீயே தேர்ந்து கொண்டாய் என்றுசொன்னதற்காக முல்லா இவ்வாறு கிண்டல் செய்தார். குடிப்பதற்கும் ஓர் அளவு வேண்டும். குடிக்காமல் இருப்பதே நல்லது.

# இலட்சுமி
# பாதணியகம்

உங்கள் பாதங்களுக்கேற்ப நீண்டநாட்கள்
உழைக்கக்கூடிய பாதணிகள் எங்குமே
கிடைக்கவில்லையா?

## கவலையை விட்டுவிடுங்கள்

ஆடவர்களே! நங்கையர்களே! முதியவர்களே!
சிறுவர், சிறுமியரே, மாணவ மணிகளே
நீங்கள் விரும்பிய ரகங்களில் உங்கள் பாதங்களுக்கு
இதமான பாதணிகளைத் தரமாக பெற்றுக்கொள்ள

இன்றே நாடுங்கள்

## இலட்சுமி பாதணியகம்

இல. 47, புதியசிறப்பு அங்காடி, (உட்புறம்) யாழ்ப்பாணம்.

# இந்தியப் பிரதமரின் அமெரிக்கப் பயணம்

நரியும் பாம்பும், எலியும் பூனையும், எண்ணையும் தண்ணீரும் என எத்தனையோ உவமைகளால் வர்ணிக்கலாம் அமெரிக்க இந்திய உறவை.

அமெரிக்க, இந்திய உறவு கடந்த சுமார் 50 ஆண்டுகளாக நன்றாக இருந்ததில்லை. இனி வரும் 50 ஆண்டுகளுக்குக்கூட நன்றாக இருக்கப்போவதுமில்லை. ஏனென்றால் இந்த உலகை தன்னையும் தனது நட்பு நாடுகளையும் தனது தலைமையை ஏற்றுப் பணிந்து நடக்கும் நாடுகளையும் தவிர வேறு எந்தவித கௌரவமான நாட்டிடமும் அணுவாயுதமோ, ஏவுகணைகளோ, நவீன தொழில் பாடு. இதனால் தான் இந்த உலகை ஆயிரக்கணக்கான தாவரங்கள் அழித்து நிர்மூலமாக்கும் வல்லமை கொண்ட அணுக்குண்டுகளை ஆயிரக்கணக்கில் அமெரிக்கா குவித்து வைத்துக்கொண்டு, மூன்றாம் உலக நாடுகள் அல்லது ஐரோப்பிய நாடுகள் தவிர்ந்த எந்த நாடும் ஒரு அணுக்குண்டைக் கூடத் தயாரித்துவிடக் கூடாதென்பதில் அமெரிக்கா தீவிரமாக இருந்து வருகிறது. இந்நிலையில் இந்தியா வைத்திருப்பதாக நம்பப்படும் அணுக்குண்டு இதைச் சுமந்து சென்று வீச உதவும் பிரிதுவி, அக்னி ஏவுகணைகளை இந்தியா கைவிட வேண்டுமென்று இந்த நாட்களில் அமெரிக்கா கடுமையான அழுத்தத்தைத் தந்து வருகிறது.

*இந்தியப் பிரதமர் நரசிம்மராவ் அமெரிக்காவிற்குப் பயணமானபோது வெரித்தாஸ் வானொலியில் ஒலிபரப்பான உண்மையின் எண்ணங்களில் இருந்து...*

நுட்பமோ இருக்கக் கூடாது. அவைகளை யாரும் யாருக்கும் விற்பனை செய்யக்கூடாது. புதிதாகக் கண்டுபிடித்து விடவும் கூடாது என்பது அமெரிக்காவின் தந்திரமிக்க, சுயநலமான நிலைப்

நரசிம்மராவ் அமெரிக்காவிற்கு மேற்கொள்ளும் பயணத்தினால் அமெரிக்க-இந்திய உறவு வலுப்படும் அல்லது சுமுகமாகும் என யாராவது எதிர் பார்த்தால், நாம்தாம் முட்டாள்கள். அமெ

ரிக்காவை நினைத்தால் இந்தியா தொடர்பாக நமக்கெழும்பும் கேள்விகள் பலப்பல.

1. அமெரிக்காவிற்கு அணு வாயுதம் எதற்குத் தேவையோ, அதே காரணம் இந்தியாவிற்கும் இருக்கக்கூடாதா? இந்தியாவிற்கு அணுவாயுதம் தேவையில்லை யென்று முடிவெடுக்க வேண்டியது அமெரிக்காவா? அமெரிக்கா விற்கு ஐ. சீ. பீ. எம். (Inter Continental Ballistic Missile) எனப்படும் கண்டம் விட்டுக் கண்டம் பாயும் தொலை தூர ஏவுகணை தேவையென்றால் இந்தியாவிற்கு மட்டும் ஏன் தேவையாக இருக்கக் கூடாது?

2. இந்தியா ஒரு ஏழை நாடு எனவே பணத்தை இந்தமாதிரி அணுவாயுதங்களில் செலவழிக்கக் கூடாதென்று சொல்ல அமெரிக்கா யார்? இது முடிவு செய்ய வேண்டியது இந்தியாவா? அமெரிக்காவா?

இந்தியா இராணுவ ரீதியாக வலுவின்றி இருந்தபோது சண்டைக்கு வந்த சீனா, இனியொரு சண்டையை நடத்தினால் தன்னிடம் குவித்து வைத்திருக்கும் அணுவாயுதம்மூலம் இந்தியாவைத் தற்போது தூசியாக்கக் கூடிய வல்லமையைப் பெற்றுள்ளது. இந்தியா சீனாவிடமிருந்து தாக்குதல் எதையும் எதிர்கொள்ளாதெனும் உத்தரவாதத்தைச் சீனாவிடமிருந்து பெற்றுத் தர இயலாத அமெ

## தீபெத்

*தீபெத் ஆன்மீகத் தலைவர் தலாய்லாமா இத்தாலிய சனாதிபதி, பிரதமர் ஆகியோரைச் சந்தித்து பேச்சுவார்த்தை நடாத்தியிருக்கின்றார். சீனாவிடமிருந்து தீபெத்திற்கு சுயாட்சி பெறுவதற்காக இத்தாலியில் தமக்கு ஆதரவு இருப்பதாக தலாய்லாமா அந்நாட்டு தலைவர்களுடன் பேச்சுவார்த்தை நடாத்துகையில் தெரிவித்தார். தலாய்லாமாவின் இந்தச் சந்திப்பிற்கு சீனாகடும் ஆட்சேபனை தெரிவித்துள்ளது.*

*தலாய்லாமா ஒரு சமயப் பிரமுகர் அல்ல என்றும் இவர் வெளிநாட்டு தலைவர்களை சந்திப்பதை சீனா வன்மையாக எதிர்க்கிறது என்று அது கூறியிருக்கின்றது. எவ்வாறாயினும் தீபெத் பிரச்சினை இதுவரை காலமும் ஓரளவிற்கு தணிந்திருந்த போதிலும் இப்போது மீண்டும் புதிய நிலமை ஒன்று தோன்றியிருக்கின்றது. இதனால் இந்தியா, தீபெத்திற்கு இடையேயும், இந்தியா, சீனாவிற்கு இடையேயும் மீண்டும் ஒரு தலைவலியை ஏற்படுத்தும் என்பதில் ஆச்சரியம் இல்லை.*

ரிக்கா, இந்தியா தனது அணுத் திட்டத்தைக் கைவிட எப்படி வலியுறுத்தலாம்.

இந்தியா சுயமாகத் தமது செயற்கைக்கோளை விண்ணில் செலுத்தத் தேவைப்படும் றொக் கட் உற்பத்திக்கு உதவும் கிறோ ஜினி எஞ்சினை இந்தியா ரஷ்யா விடமிருந்து பெறுவக் கொள்ளத் தடைவிதித்ததே அமெரிக்கா. இந்தியா நவீன தொழில் நுட்பத் துல மேம்லாங்கிவிடக் கூடா தெனும் அமெரிக்கக் காழ்ப் புணர்வு அதைக் காட்டவில் லையா?

இந்தியாவிற்கும் பாகிஸ் தானுக்கும் உரசல் இருப்பதால் இரு நாடுகளிடமும் அணுக்குண்டு இருக்கும் பட்சத்தில் தெற்காசி யப் பிராந்தியத்தில், அணுக்குண் டுப் போர் நடக்குமென கூப் பாடு போடும் அமெரிக்கா, சோவியத்துடன் அமெரிக்கா போர் மூளும் அபாயத்துடன் இருந்தபோது, இரு நாடுகளும் தங்களது அணுக்குண்டுகளை முற்றிலுமாக அழித்துவிட ஏன் அமெரிக்கா முன்யோசனை யொன்றை முன்வைக்கவில்லை? தேசியப் பிரச்சினையைப் பொறுத்தவரை இந்தியாவும், பாகிஸ்தானும் நீடித்திருப்பதை விட என்னை மத்தியஸ்தராகக் கூப்பிடு என்பதும், காஷ்மீர் மக்களின் விருப்பமும் கணக்கில் எடுத்துக் கொள்ளப்படவேண்டு மென அமெரிக்கா தற்போது கூற ஆரம்பித்திருப்பதும் காஷ் மீரைத் தனி நாடாக்கி தனது செல்வாக்கைத் தெற்காசியப் பிராந்தியத்தில் நிலைநிறுத்தும் அமெரிக்காவின் தந்திரமதானே?

பாகிஸ்தானில் அணுக்குண்டு இல்லையென்று நிரூபிக்கப்படாத வரை பாகிஸதானுக்கு ஆயுத விற்பனையில்லையெனக் கூறி வந்த அமெரிக்கா, இப்போது எவ்-16 ரக விமானங்களையும், 38 போர் விமானங்களையும் விற்பனை செய்ய முன்வந்தது, இந்தியாவும் வேறு வழியின்றி ரஷ்யாவிடமிருந்து மிக்-29 எம். ரக போர் விமானங்களில் 30ஐ வாங்கவைத்தது. தெற்காசியப் பிராந்தியச் செல்வத்தை ஆயுதக் கொள்வனவில் செலவிடவைத்து இந் நாடுகளை ஏழையாக்குவதும் இந்தியாவையும், பாகிஸ்தானை யும் ஆயுதக் குவிப்பில் ஈடுபடுத்து வதும் தானே?

இந்தியாவில் காஷ்மீரிலும், பஞ் சாப்பிலும் மனிதவுரிமைகள் மீறப்படுவதாகக் குரலெழுப்பிக் கத்தும் அமெரிக்கா, பாகிஸ் தானின் சிந்து மாகாணத்தில் இந்திய வம்சாவளி முஸ்லிம் மக் களுக்கெதிராகவும், பாகிஸ் தானில் கிறிஸ்தவ மக்களுக்கு எதிராகவும் இழைக்கப்படும் கொடுமைகளுக்கு எப்போதாவது குரல் தந்துள்ளதா? அல்லது

இலங்கையில் அதாவது ஈழத்தில் நடக்கும் மனிதவுரிமை குறித்து இலங்கை அரசை எப்போதாவது கண்டித்ததா? அல்லது தட்டிக் கேட்டதா? இந்தியாவிற்கான அமெரிக்கத் தூதரை நியமிக்காமல், கடந்த ஒரு ஆண்டுகாலமாகவே தாமதப்படுத்திய இந்தியாவை, அவமதிக்கும் அமெரிக்கா எப்படி இந்தியாவை ஒரு சமமான நாடாக நடாத்துவதாக நம்ப முடியும்.

''காட்''என்றும் 'டங்கல்' ஒப்பந்தமென்றும் அழைக்கப்படும் சர்வதேச ஒப்பந்தமூலம் இந்தியாவைச் சந்தையாக்கி இலாபம் சம்பாதிக்கத் துடிக்கும் அமெரிக்கா இந்திய நலனில் அக்கறை உள்ள நாடு என்றால் அது காதில் பூச்சூடும் வேலையல்லவா? இந்தியா அமெரிக்காவுடன் முறையற்ற வர்த்தகத்தில் ஈடுபடுவதாகக் கூறி, அமெரிக்காவின் சுப்பர்-301 சட்டத்தின் கீழ் இந்தியாவைத் தண்டிப்போமென தற்போது மிரட்டிய அமெரிக்கா எப்படி இந்தியாவிற்கு நட்பு நாடாக இருக்க முடியும்? எனவே இன்று அமெரிக்காவிற்குச் செல்லும் பி. வி. நரசிம்மராவ் மனதில் வைக்கவேண்டியது ஒன்றேயொன்றுதான், அமெரிக்கா சுயநலமே உருவெடுத்த பொருளாதார இலாபத்திற்காக எந்தவித கொள்கையையும் அடகுவைக்கத் தயங்காத ஒரு கடைந்தெடுத்த ஒரு முதலாளித்துவ நாடு. இதனுடன் நட்பு என்று சொல்லி நாம் நம்மை இழந்துவிடக் கூடாது. கௌரவமாகச் சென்று, அமெரிக்காவின் அழுத்தங்களுக்கு அடிபணியாது, இந்தியாவின் சுயமரியாதையை அடகுவைக்காமல் பிரதமர் நரசிம்மராவ் திரும்பவேண்டும். இதுவே இந்திய மக்களின் ஒட்டுமொத்தக் கருத்தாக அமையும்.

### நகைச்சுவை

பொதுக் கூட்டத்தில் ஒருவர் பேசிக்கொண்டு இருந்தார். அப்போது கூட்டத்தில் இருந்த ஒருவர் பைத்தியக்காரர் என்று துண்டு எழுதி மேடையில் பேசிக்கொண்டு இருந்த பேச்சாளருக்கு அனுப்பினார். அதைப் படித்துப் பார்த்துவிட்டு பேச்சாளர் கூட்டத்தினரை நோக்கி பைத்தியக்காரன் என்று ஒருவர் தன் பெயரை மட்டும் எழுதி அனுப்பியுள்ளார் மற்ற விபரங்கள் எதையும் அவர் கூறவில்லை என்றார். உடனே கூட்டத்தில் பலத்த சிரிப்பொலி எழுந்தது. எழுதி அனுப்பியவர் இருந்த இடம் தெரியாமல் போய்விட்டார்.

பசுமைப் புரட்சி
தமிழீழத்தின் எழுச்சி

# விவசாயிகளே!

உங்களுக்குத் தேவையான உரம், கிருமிநாசினி, விவசாய உபகரணங்கள், விதைகள், மற்றும் எரிபொருள் ஆகிய அனைத்தையும் வழங்குவதற்குக் காத்திருக்கின்றது

# பசுமை

## வேளாண் சேவை



## நிலையங்களின் அமைவிடங்கள்:

**கோப்பாய்**
நீர்வேலிச் சந்தி, நீர்வேலி.

**சண்டிலிப்பாய்**
கட்டுடைச்சந்தி.
சண்டிலிப்பாய்

**உடுவில்**
மானிப்பாய் வீதி, உடுவில்.

**நல்லூர்**
முடமாவடி, நல்லூர்.

**கோண்டாவில்**
இருபாலை வீதி,
கோண்டாவில்.

**சங்கானை**
பிரதான வீதி, சங்கானை.

**கரவெட்டி**
பருத்தித்துறை வீதி,
நெல்லியடி.

**பருத்தித்துறை**
மந்திகைச் சந்தி

**கைதடி**
கண்டி வீதி, கைதடி.

**சாவகச்சேரி**
கண்டி வீதி, சாவகச்சேரி.

**கொடிகாமம்**
கச்சாய் வீதி, கொடிகாமம்.

**பளை**
கண்டி வீதி, பளை.

# மருந்து பால்மா வாணிபம்

நாங்கள் மருந்து வாணிபத்தில்
வித்தியாசமானவர்கள்! அதிலும் புதியவர்கள்!
ஆனால் முதிர்ந்தவர்கள்!!
எங்கள் வாடிக்கையாளரின் தீர்ப்பு இது!!!
ஆம்

**சகலவித ஆங்கில மருந்துவகைகள், பால்மாவகைகள்**
**சத்துணவுகள் மற்றும் நானாவித பொருட்கள்**

இன்னும் பல!!
வைத்தியர்கள் சிபார்சுச் சிட்டைகள் உடனுக்குடன்
கவனிக்கப்பட்டு மருந்துத் தேவைகளை
தாமதமின்றி பூர்த்திசெய்திட நாடுங்கள்

## மருந்து பால்மா
## வாணிபம்

**484, கேணல் கிட்டு சாலை,**
(யாழ். மருத்துவமனை முன்பாக)
**யாழ்ப்பாணம்.**

**எமது கிளை நிறுவனங்கள்:-**

2. சங்கரத்தை,
வட்டுக்கோட்டை.

3. பிரதான வீதி,
சித்தங்கேணி.

4. ஊறணி,
வல்வெட்டித்துறை.



மா நகர சபை
யாழ்ப்பாணம்